# EASTERN UNIVERSITY, SRI LANKA

## EXTERNAL DEGREES

## FIRST EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION/COMMERCE EXTERNAL DEGREE -2002

## CC 113 SRI LANKAN STUDIES

04 ... 2002

நேரம்: 3 மணித்தியாலங்கள்

பகுதி I ல் இருந்து எல்லா வினாவிற்கும் பகுதி II ல் ஏதாயினும் நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி I

1. I. தரப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துக் காட்டுக.
    - a. இரண்டு ஈரவலயப் பிரதேசங்கள்
    - b. நெல் ஆராய்ச்சி நிலையம் மூன்று
    - c. தென்னை முக்கோணப் பிரதேசம்
    - d. பண்டைய இராசதானிகளின் தலைநகர் மூன்றைக் குறிப்பிடுக.
    - e. மூன்று சுதந்திர வர்த்தக வலயங்கள்.

   II. a. இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் பொருளாதார முக்கியத்துவங்கள் எவை?

   b. இலங்கையின் தாராளமயமாக்கல் கொள்கையின் முக்கிய பண்புகள் எவை?

   c. இலங்கையின் தைத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படும் இரண்டு நாடுகள் தருக.

   d. இலங்கையில் காணப்படும் பல்வேறு மண் வகைகளின் பெயர் தருக.

   e. இலங்கையின் மழைவீழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

   f. இலங்கையில் ஆட்சி செலுத்திய மூன்று நாடுகளின் பெயர்களைத் குறிப்பிடுக.

   g. ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூன்று பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

   h. பொலநறுவைக் காலத்தின் மூன்று மன்னர்களின் பெயர்களைத் தருக.

i. பொதுசனத் தொடர்பு சாதனங்கள் என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

j. இலங்கையின் கனிய வளங்களின் முக்கியத்துவத்தினை விளக்குக.

k. இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை எந்த அரசியல் கட்சி எப்போது அறிமுகப்படுத்தியது.

l. VAT என்பதில் இருந்து யாது விளங்கிக் கொள்கின்றீர்?

m. "இனமுரண்பாடு" என்பதிலிருந்த யாது விளங்கிக் கொள்கின்றீர்?

n. இலங்கையின் அமைவிடம் தொடர்பாக அதன் புவியியல்சார் முக்கியத்துவத்தினைத் தருக.

o. இலங்கையின் உல்லாசப் பிரயாணக் கைத்தொழில் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் யாவை?

(15x2=30)

## பகுதி II

2. அ) இலங்கையில் சனத்தொகை செறிவை நிர்ணயிக்கும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் மொத்த சனத்தொகையில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதன் காரணமாக எதிர் கொள்ளப்படும் சவால்களைக்குறிப்படுக.

(10 புள்ளிகள்)

3. "1977 களின் பின் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்காகப் பல தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளது". இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

4. இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றிற்குச் சிறு குறிப்பெழுதுக.

a. சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்
b. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி
c. உலகமயமாதல்

(15 புள்ளிகள்)

6. 1972ம் ஆண்டு குடியரசு யாப்பினை 1978ம் ஆண்டு குடியரசு யாப்புடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் விளக்குக.

அ) ஜனாதிபதி முறை
ஆ) பாராளுமன்ற முறை
இ) தேர்தல் முறை

(15 புள்ளிகள்)